நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 588/2021

வழக்கு சாட்சி : PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலைமணி | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | ஆனந்தராஜ் | | : | |
| கிராமம் | : | | வயது | : | 53 / 2025 |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **12.09.2025**

**(1 வது** எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3 வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜராவதலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. )

**மனுவின் பேரில் குறுக்கு விசாரணை :**

24.12.2020 ல் போலீசார் என்னை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் போலீசார் விசாரணையில் எனது கணவர் என்னிடம் மேற்படி நிறுவனம் முதலீடுகளுக்கு 16 சதவீதம் வட்டி தருவதாக சொன்னதாக கூறியுள்ளேன் என்றால் எனது கணவர் என்னிடம் சொன்னார். நானும் பார்த்தேன். மேற்படி விபரத்தை எனது கணவர் படித்துக் காட்டினார். எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் எனது போலீசார் விசாரணையில் எதிரிகள் மேற்படி நிறுவனத்தில் பணியாற்றி வருவதாகவும் அதன் தலைமையகம் கோயம்புத்தூரில் உள்ளது என்றும் கூறியுள்ளேன் என்றும், நான் எனது முன் விசாரணையில் எதிரிகள் மூவரும் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர்கள் என்று என்னிடம் தெரிவித்ததாக கூறியுள்ளேன் என்றும், இரண்டில் எது உண்மை என்றால் எதிரிகள் மூவரும் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர்கள் என்று என்னிடம் தெரிவித்தார்கள். நான் எனது போலீசார் விசாரணையில் எதிரிகள் மேற்படி நிறுவனத்தில் பணியாற்றி வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

ஜெயசுதா என்பவர் மேற்படி நிறுவனத்தில் வேலை செய்வதாக என்னிடம் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். என்னிடம் காட்டப்படும் நிறுவனத்தின்

நோட்டீஸில் என்ன எழுதப்பட்டிருக்கிறது எனக்கு தெரியாது. மேற்படி நிறுவனம் மத்திய, மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பது எனக்கு முதலீடு செய்த போது தெரியும் என்றால் சரியல்ல. 2,3 எதிரிகள் மேற்படி நிறுவனத்தின் பணியாளர்களும் அல்ல உரிமையாளர்களும் அல்ல என்றால் சரியல்ல. உரிமையாளர் என்று என்னிடம் சொன்னார்கள். 1வது எதிரி மேற்படி நிறுவனத்தின் பணியாளர் என்றும், உரிமையாளர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் முதலீடு செய்த சமயத்தில் 1வது எதிரி மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்று சொன்னார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்று என்னிடம் ஆவணங்கள் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அதனை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எதிரிகள் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்று என்னிடம் எந்த ஒரு ஆவணங்களையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் எனது போலீசார் விசாரணையில் எனது முன் விசாரணையில் சொன்னது போல எதிரிகள் வள்ளலார் கோவிலுக்கு வந்து என்னிடம் பணத்தை முதலீடு செய்யுமாறும், அதற்கு தாங்கள் பொறுப்பு என்றும் சொன்ன விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதியை பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி நிறுவனத்தின் தலைமை நிறுவனம் கோயம்புத்தூரில் உள்ளதாக கேள்விபட்டு எனது கணவர் அங்கு சென்று பார்த்து வந்தார். அவ்வாறு ஒரு நிறுவனமும் இல்லை. நான் கோயம்புத்தூர் செல்லவில்லை. பணத்தை கோரி நானும் எனது கணவரும் நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக எந்த தேதியிட்ட எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தேததி தெரியாது ஆனால் பணம் போட்டதற்கான 13 பாண்டுகள் என் பெயரிலும் 12 பாண்டுகள் என் கணவர் பெயரிலும் தாக்கல செய்துள்ளேன். இந்த வழக்கிற்கு முன்பு எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நானும் எனது குடும்பத்தாரும் பணத்தை கேட்டு 1வது எதிரியின் வீட்டிறகு சென்று மிரட்டியதாக அவர் போலீசில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

எதிரிகள் என்னிடம் பணம் பெற்று ஏமாற்றவில்லை என்றும், மேற்படி நிறுவனத்தின் 1வது எதிரி 3 லட்சம் ரூ முன் தொகை கட்டி மேற்படி நிறுவனத்தில் பணியாற்றினார் என்றும், மேற்படி நிறுவனத்தால் 1வது எதிரியையும் ஏமாற்றி உள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் பணம் கெட்ட சென்ற போதெல்லாம் மேற்படி நிறுவனத்தின் 10, 15 நபர்கள் வேலை பார்த்து வந்தாரக்ள் என்றால் சரியல்ல. எதிரிகள் மூவர் மட்டும் தான் அங்கு பணியில் இருந்தார்கள். நான் பணத்தை கேட்டு சென்ற போது எதிரகள் என்னை கொலை செய்து விடுவதாக மிரட்டியதாக புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சொன்னேன். இந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் தனிப்பட்ட வகையில் புகார் கொடுத்துள்ளேன். அனைவரும் சேர்ந்து போலீசில் சொல்லியுள்ளோம். மேற்படி எதிரிகள் என்னை மிரட்டாத காரணத்தால் தான் மேற்படி சம்பவம் குறித்து தனிப்பட்ட வகையில் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

எனக்கு கொடுக்கப்பட்ட பாண்டில் கண்ட நிறுவனம் உண்மையில் உள்ளதா என்று நான் விசாரித்தேனா என்றால் எனக்கு அந்த அளவுக்கு படிப்பறிவு கிடையாது. மேற்படி நிறுவனம் 1வ எதிரியையும், 2வது எதிரியையும் ஏமாற்றி உள்ளது என்றும் இந்த விபரம் தெரிந்தும் 1வது எதிரியும் மீதும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதும் புகார் கொடுத்தால் பணத்தை வசூல் செய்து விடலாம் என்று எண்ணி மேற்படி நிறுவனத்தை முற்றிலும் மறைத்து விட்டு எதிரிகளுக்கு எதிராக மட்டும் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2,3 எதிரிகளுக்கும் மேற்படி நிறுவனத்திற்கும் எந்த தொடர்பும் இலலை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் மேற்படி ஆவணங்களுக்கும் எதரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஜெயசுதா என்பவர் எனது உறவினர் என்று அவரை காப்பாற்ற வேண்டும் என்று அவரை மட்டும் நீக்கி விட்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உரிமையியல் பிரச்சினையை மறைத்து மிரட்டி பணம் பெற போலீஸ் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 588/2021

வழக்கு சாட்சி : PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அபிநயா | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | ரவிக்குமார் | | : | |
| கிராமம் | : | | வயது | : | 25/ 2025 |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **12.09.2025**

**(1 வது** <u>எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3 வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜராவதலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. </u>**)**

**<u>மனுவின் பேரில் குறுக்கு விசாரணை :</u>**

24.12.2020 ல் போலீசார் என்னை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் மேற்படி நிறுவனத்திற்கு செல்லவில்லை என்றால் சரி. மேற்படி நிறுவனத்தில் யார் யார் பணியாற்றினார்கள் என்ற விபரம் எனபக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. என் தந்தை சொல்லி தான் எனக்கு தெரியும். மேற்படி நிறுவனத்திற்கும் எனது பெற்றோருக்கும் என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. எனது பெற்றோர் எந்த தேதியில் எவ்வளவு தொகை முதலிடு செய்தார்கள் என்ற விபரம் ன்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால நான் பாண்ட் பேப்பரை வாங்கி பார்த்துள்ளேன். மேற்படி நிறுனத்தில் எத்தனை பேர் வேலை பார்த்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. நானும் எனது பெற்றோர்களும் எதிரியின் வீட்டிற்கு சென்ற பணத்தை கேட்டோம் என்றால் சரி. அவ்வாறு சென்ற போது எதிரிகள் எங்களை கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள் இது சம்பந்தமாக நான் போலீசில் தனிப்பட்ட வகையில் புகார் கொடுத்துள்ளோமா என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். எதிரிகள் எங்களுக்கு கொலை விடுத்த பிறகு எத்தனை நாட்கள் கழித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

அலுவலகத்தில் புகார் கொடுத்தோம் என்றால் 1,2 மாதங்கள் கழித்த புகார் கொடுத்தோம். மேற்படி எதிரிகள் எங்களை மிரட்டாத காரணத்தால் தான் மேற்படி சம்பவம் குறித்து தனிப்பட்ட வகையில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி நிறுவனம் 1வது எதிரியையும் ஏமாற்றி உள்ளது என்றும் இந்த விபரம் தெரிந்தும் 1வது எதிரியும் மீதும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதும் புகார் கொடுத்தால் பணத்தை வசூல் செய்து விடலாம் என்று எண்ணி மேற்படி நிறுவனத்தை முற்றிலும் மறைத்து விட்டு எதிரிகளுக்கு எதிராக மட்டும் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட நோட்டீஸை நான் பார்த்தேனா என்றால் இல்லை. எனது அப்பா சொல்லி தான் தெரியும்.

2,3 எதிரிகளுக்கும் மேற்படி நிறுவனத்திற்கும் எந்த தொடர்பும் இலலை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் மேற்படி ஆவணங்களுக்கும் எதரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஜெயசுதா என்பவர் எனது உறவினர் என்று அவரை காப்பாற்ற வேண்டும் என்று அவரை மட்டும் நீக்கி விட்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உரிமையியல் பிரச்சினையை மறைத்து மிரட்டி பணம் பெற போலீஸ் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பாண்ட் பேப்பரை வாங்கி பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பாண்ட் பேப்பரில் மேற்படி நிறுவனத்தின் பதிவு எண், தலைமையகத்தின் முகவரி, தொலைபேசி எண் போன்ற விபரங்கள் கண்டுள்ளது என்றால் சரி. மேற்படி பாண்டில் நிபந்தனை எண். 9ல் முதலிடு செய்வது குறித்து ஏதேனும் பிரச்சனை இருந்தால் கோயம்புத்துாரில் உள்ள சிவில் நீதிமன்றத்தில்தான் தீர்க்கப்பட வேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரி. அத போல நிபந்தனை எண். 8ல் ஏதேனும் பிரச்சனை இருந்தால் கோயம்புத்துாரில் உள்ள Aribitator முன்னிலையில் தான் தீர்க்கப்பட வேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரி. ஆகவே மேற்படி நிபந்தனைகளின் பேரில் இந்த வழக்கு கோயம்புத்துாரில் தான் தாக்கல் செய்யப்பட்டிரக்க வேண்டும் என்றும், இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. மேற்படி நிறுவனம் ஒரு போலி நிறுவனம் ஆகும்.